MC.39/2024

19.01.2026

RW1–ராஜேஷ் த/பெ.வீரப்பன், வயது– 36

மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 03.47 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 04.26 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 19.01.2026

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

உங்களுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 11 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் உங்களால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். இரண்டாம் மனுதாரர் மீரா எங்கு பிறந்தார் என்றால் எங்கள் ஊரில் உள்ள நரியம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறந்தார். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் உங்கள் குழந்தை நரியம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறக்கவில்லை என்று சொல்லியுள்ளீர்களா என்றால் பிரமாண வாக்குமூலத்தில் பிழையாக சொல்லப்பட்டுள்ளது என் குழந்தை பிறந்தது நரியம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தான். தட்சிதா ஸ்ரீ என்ற குழந்தை எப்போது பிறந்தது என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. சுமதி என்பவர் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஜே.சுமதி என்பவர் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஜே.சுமதி என்பவரை நீங்கள் இரண்டாம் திருமணம் செய்து கொண்டதாகவும் உங்களுக்கும் ஜே.சுமதி என்பவருக்கும் பிறந்த குழந்தை தான் தட்சிதா ஸ்ரீ என்றால் தவறு. கதவு எண்.353, காவல் நிலையம் எதிரில் கடாம்பூர், உமராபாத், ஆம்பூர் உங்கள் முகவரியா என்றால் அந்த விலாசத்தில் நான் குடியிருந்தேன். உங்களுக்கும் ஜே.சுமதி என்பவருக்கும் பிறந்த குழந்தை தட்சிதாஸ்ரீயின் பிறப்பு சான்று

தான் உங்களிடம் காட்டப்படுவது என்று சொன்னால் சரியல்ல. அது பொய்யான சான்றாகும். நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் சலூன் கடையில் வேலை செய்கிறேன். நீங்கள் வேலை செய்யும் சலூன் கடையின் விவரம் சொல்ல முடியுமா என்றால் சின்னவரிகம், ஸ்டார் சலூனில் தற்போது வேலை செய்கிறேன். கடாம்பூர், கோல்டன் சலூனில் இதற்கு முன்னர் வேலை செய்தேன். உங்களின் அலைபேசி எண் சொல்ல முடியுமா என்றால் 9751610881. உங்களிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஸ்டார் சலூன் உங்களுடையதா என்றால் ஆமாம் அந்த கடை தற்போது ஸ்ரீநிவாசன் என்பவர் பெயரில் கைமாற்றப்பட்டது. புகைப்படங்கள் (3 வரிசை) ம.சா.ஆ.5. மேற்படி கடை உங்களுடையது தான் என்றும் வழக்கிற்காக வேண்டி ஸ்ரீநிவாசன் என்பவர் பெயருக்கு கைமாற்றம் செய்யப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இரண்டு கடைகளும் கடாம்பூரில் உள்ளது எனவும் அந்த இரண்டு கடைகளும் நீங்கள் வாடகைக்கு விட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அது என்னுடைய அண்ணன் கடையாகும். நீங்கள் ஆம்பூர் ஷீ கம்பெனிக்கு ஒரு மினி பஸ் வாடகைக்கு விட்டு அதன் மூலம் மாதம் குறைந்தபட்சம் ரூ.1,00,000/- பெற்று வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சிம்கார்டு, டிஸ் ஆண்டனா மூலம் மாதம் ரூ.50,000/- வருமானம் ஈட்டி வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஆம்பூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகாரத்து மனுவின் சாராம்சம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. ஆம்பூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் விவாகாரத்து வழக்கு நீங்கள் தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் அந்த விவாகாரத்து வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளை முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள காரணத்தினால் உங்கள் முதல் விசாரணை சாட்சியம் பொய்யான சங்கதியை உள்ளடக்கியது என்று சொன்னால் சரியல்ல.

உங்களுடைய பெண் குழந்தை மீரா எங்கு படிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. இரண்டாம் மனுதாரர் மீரா பர்கூர் வேளாங்கண்ணி மெட்ரிக்குலேசன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இரண்டாம் மனுதாரர் மல்லப்பள்ளி கிராமத்திலிருந்து பள்ளிக்கு பள்ளிப்பேருந்தில் சென்று வருகிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. மீராவின் பள்ளிப் பேருந்து கட்டணம் உட்பட கல்விக்கட்டணம் ஆண்டுக்கு ரூ.85,000/- செலவாகிறது எனவும் மேற்படி கட்டணத்தை மீராவின் தாய் மாமன்கள் இருவர் செலவு செய்து வருகிறார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. உங்கள் மனைவியை பராமரித்து பாதுகாத்து வருவது அவருடைய அண்ணன்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. உங்கள் திருமணத்தின் போது உங்களுக்கு இரண்டு பவுன் தங்க சங்கிலி மற்றும் மனுதாரருக்கு பதினைந்து பவுன் தங்க நகை சீர்வரிசையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அனைத்தும் மனுதாரர் எடுத்து சென்றுவிட்டார். மேலும் பீரோ, மரக்கட்டில் சீர்வரிசை சாமான்கள் சுமார் இரண்டு இலட்சம் மதிப்புள்ளவை திருமணத்தின்போது மனுதாரர் வீட்டிலிருந்து உங்களுக்கு போட்டார்களா என்றால் போட்டார்கள் அனைத்தும் மனுதாரர் எடுத்துச்சென்றுவிட்டார். உங்களுக்கு போட்ட இரண்டு சவரன் தங்க நகை உங்கள் வசம் தான் உள்ளது என்றால் மனுதாரர் எடுத்து சென்றுவிட்டார். உங்களுக்கு கொடுக்கப்பட்ட இருசக்கர வாகனம் உங்களிடம் தான் உள்ளதா என்றால் இருசக்கர வாகனம் எனக்கு கொடுக்கவில்லை. இருசக்கர வாகனம் வாங்குவதற்கு உங்களுக்கு ரூ.50,000/- திருமணத்தின்போது மனுதாரர் வீட்டிலிருந்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் கொடுக்கவில்லை பணமாக கொடுத்தார்கள் நான் தான் மனுதாரருக்கு தாலிச்செயினாக போட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டேன். மனுதாரர் வீட்டிலிருந்து நீங்கள் ரூ.50,000/- வாங்கவில்லை என்று சொல்லுகிறீர்களா என்றால் வாங்கவில்லை. மனுதாரர் வீட்டில் கொடுக்கப்பட்ட மேற்படி சீர்வரிசைகள் அனைத்தும் உங்களிடம் தான் இருந்தது எனவும் நீங்கள் தான் அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து அந்த

சீர்வரிசகைளை தான்தோன்றிதனமாக செலவு செய்துவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களை ராசுக்குட்டி என்று ஊரில் உள்ளவர்கள் செல்லப்பெயரை வைத்து உங்களை அழைப்பார்கள் என்று சொன்னால் என்னை யாரும் அந்த பெயரில் அழைக்கமாட்டார்கள். முகநூல் மற்றும் கட்செவி அஞ்சல் (Facebook and Whats app) உங்கள் பெயர் ராசுக்குட்டி என்ற கணக்கில் தான் உள்ளது என்றால் மேற்படி Facebook மற்றும் Whats app கணக்கை நான் உபயோகப்படுத்தி பல நாட்கள் ஆகிவிட்டது. நீங்கள் முதல் மனுதாரரை திருமணம் செய்த பிறகு சுமதி என்ற பெண்ணுடன் தொடர்பில் இருந்து மனுதாரரை ஒதுக்கி வைத்து முதல் மனுதாரருக்கு எதிராக அதன் காரணமாக தான் விவாகாரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் போதிய வசதி வாய்ப்புடன் இருந்து மனுதாரர்கள் இருவருக்கும் தலா ரூ.50,000/- ஜீவனாம்சம் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்தவர் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.01.19 16:54:56 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.